முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

வழக்கு எண். ஓ.எஸ்.9/18

2019 ம் வருடம் நவம்பர் மாதம் 21 ம் நாள் வியாழக்கிழமை

டி டபிள்யூ. 1 என்பவரது வாக்கு மூலம் (1873 ம் வருடத்திய 10 வது விதியின்படி என்பவரால் ஆணையிடப்பட்டு பிரமாணம்
செய்யப்படுகிறது,

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மல்லிகா | தந்தைபெயர் | |
| கிராமம் | | தாலுகா | |
| சமயம் | | ஜாதி | |
| தொழில் | | வயது | |

தேதி : 21.11.2019

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை வாதி தரப்பில்

வாதிக்கு சற்று காது கேட்காது என்று சொன்னால் சரிதான். 1 வது பிரதிவாதி தான் எதிர்வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார் என்றால் சரிதான். வாதியின் வழக்குரை என்னுடைய கணவர் தாக்கல் செய்த எதிர்வழக்கு ஆகியவை படித்து பார்த்த பின்பு தான் முதல் விசாரணை ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்திருக்கின்றேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் சேர்த்து தான் நான் சாட்சியம் அளித்திருக்கின்றேன். தாவா சொத்துக்கள் முழுவதும் என்னடைய மாமனார் திருப்பதி செட்டியாரின் பூர்விக சொத்துக்கள் என்றால் சரிதான். என்னடைய கணவர் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் என்னுடைய முதல் விசாரணை ஆணையுறுதி ஆவணம் ஆகியவை தாவா சொத்துக்கள் என்னுடைய கணவருக்கு மட்டுமே பாத்தியப்பட்டதாக நாங்கள் குறிப்பிட்டிருக்கின்றோம். வாசாஆ 1 என்னுடைய கணவர் 2 வது பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து 3 வது பிரதிவாதியும் அந்த தானப்பத்திரத்தை எழுதிக்கொடுத்திருக்கின்றோம். அதை போல் வாசாஆ 2 யை நான் எனனுடைய கணவர் மற்றும் 3 வது பிரதிவாதி ஆகியோா சேர்ந்து 2 வது பிரதிவாதிக்கு தாவா 1 மற்றும் 2 இலக்க சொத்துக்கள் மற்றும் லட்சுமி பிரியா கல்யாண மண்டபம் தானம் எழுதிக்கொடுத்தது உண்மை தான். தாவா சொத்துக்கள் 1 வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று நாங்கள் கூறுகின்ற நிலையில் மாற்றி மாற்றி வாசாஆ 1 மற்றும் வாசாஆ 2 ஆகிய ஆவணங்களை எழுதி வைக்கவேண்டிய சிறப்பான காரணம் ஏதும் உள்ளதாக என்று கேட்டால் அப்படி பட்ட காரணம் ஏதும் கிடையாது. இதன் காரணமாகத் தான் இந்த ஆவணம் குறிப்பிட்டு சிறப்பான காரணங்கள் எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கள் வாதிக்கு உரிமை உள்ளது என்ற காரணத்ததால் எங்களுக்குள் மாற்றி மாற்றி எவ்வித

காரணம் இல்லாமல் வாசாஆ 1 மற்றும் 2 ஆகிய ஆவணங்களை வாதிக்கு மோசம் செய்யும் நோக்கத்தோடு ஏற்படுத்தின்றோம் என்றால் தவறு. கல்யாண மண்டபத்தை கூட்டுறவு நிலவளவங்கி கடன் வாங்கி தான் கட்டிருக்கின்றோம் என்று சொன்னால் அது தவறு. 4.2.03 தேதியில் நான் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை கூட்டுறவு நிலவளவங்கியில் அடமானம் வைத்து அந்த தொகையை வைத்து தான் லட்சுமிபிரியா மற்றும் திருப்பதி செட்டியார் திருமண மண்டத்தை நாங்கள் கட்டிருக்கின்றோம் என்றும் இப்போது அதை நான் மறைத்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் அது எனக்கு நினைவில்லை. அந்த தேதியில் வாதி இளவர் என்ற காரணத்தால் இளவர் என்று காட்டப்பட்டு அவரின் கார்டியனாக ஒன்றாவது பிரதிவாதி காட்டப்பட்டு அந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் பத்திரத்தில் அவ்வாறு தான் சொல்லப்பட்டுள்ளது. வழக்கானது நிலுவையில் இருந்த போது 3 வது பிரதிவாதி தாவா 1 வது இலக்க சொத்து சிவமூர்த்தி என்பவருக்கு 25.5.18 தேதியில் கிரைய ஒப்பந்தம் ஒன்றை எழுதிக்கொடுத்திருக்கின்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த விபரம் எனக்கு தெரியும் அதை தெரிந்தும் நான் மறைக்கின்றேன் என்றால் தவறு. தாவா சொத்துக்கள் திருப்பதி செட்டியாரின் பூர்விக சொத்து என்ற காரணத்தால் வாதிக்கு இதில் பங்கு உண்டு என்று சொன்னால் அவருக்கு உண்டான பங்கை நாங்கள் செய்துவிட்டோம். வாசாஆ 1 மற்றும் 2 ஆகியவை செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றும் அது வாதியின் உரிமையை பாதிக்காது என்றால் தவறு. கல்யாணமண்டபத்திற்கு இடையே கடைகள் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டது உண்மை தான். அந்த கடைகள் மூலமாக மாதம் 25000 வாடகை வருகின்றது. கடைகள் மொத்தம் 4 உள்ளது. திருமண மண்டபம் 2 மண்டபமும் சேர்த்து மாதம் ஒன்றுக்கு 30000 வரை வாடகை வரும். கறம்பக்குடி என்பது தாலுகா தலைமை இடம் தான். நாள் ஒன்றுக்கு ஒரு மண்டபம் வீதம் 25000 வரை வாடகை போகும் என்றும் அதை நான் மறைத்து சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் தவறு. அதைப்போல் கடைகளும் மாதம் ஒன்றிற்கு அதிகமாக வாடகை போகின்றது என்றும் அதை நான் மறைக்கின்றேன் என்றால் தவறு. வாதிக்கு 100 பவுன் நகை, 5 கிலோ வெள்ளி, 25 லட்சம் ரூபாய் ரொக்கம் மற்றும் காருக்கு 5 லட்சம் ஆகியவற்றை திருமணத்தின் போது செய்தோம் என்று காட்டுவதற்கு ஆவணம் எதையும் நான் இது வரை தாக்கல் செய்யவில்லை. அதைப்போல் என்னுடைய மகளுக்கு காதணி விழாவின் போது 10 லட்சம் ரொக்கம், 50 பவுன் நகை, 2 கிலோ வெள்ளி மற்றும் 1 லட்சம் மதிப்புள்ள வைரத்தோடு சீர்வரிசை செய்ததை காட்டுவதற்கு நான் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. 2017 ஆண்டு வாதியின் மகளுக்கு நடந்த பூப்புனித நீராட்டு விழாவின் போது 5 லட்சம் ரொக்கம், 10 பவுன் நகை, 2 கிலோ வெள்ளி செய்யப்பட்டன என்று காட்டுவதற்கு நான் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. இது நாள் வரை வாதியின் மகளுக்கு பூப்புனித நீராட்டு விழா எதுவும் நடத்தவில்லை என்றும் அவ்வாறு நடத்துப்பட்டு நான் சீர்வரிசை செய்யவில்லை என்றால் தவறு. எங்களுடைய சமூக வழக்கப்படி பந்தல்வரிசை பணத்தை மாப்பிள்ளையிடம்

கொடுக்கும் போது அதற்காக அவரிடமிருந்து புரோநோட்டை எழுதி வாங்கிக்கொள்வது வழக்கம் என்றால் அது தவறு. வாதியின் கணவருக்கு அவ்வாறு பந்தல் பணம் எதுவும் நாங்கள் கொடுக்கவில்லை என்றும் அதன் காரணமாகத் தான் அதற்கான புரோநோட்டை நான் தாக்கல் செய்யவில்லை என்றும் அப்படிபட்ட நடைமுறையே இல்லை என்றும் நான் கூறுகின்றேன் என்றால் தவறு. வாதியின் திருமணத்தின் போது செலவுக்காக எந்தெந்த சொத்துக்களை யார்யாருக்கு எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்தோம் என்ற விபரத்தை நாங்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும் என்னுடைய முதல் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லவில்லை. அதைப்போல் யார்யாரிடம் எவ்வளவு ரூபாய் இந்த சீர்வரிசைக்காக கடன் வாங்கினோம் என்ற விபரம் நான் குறிப்பிடவில்லை. வாசாஆ1 கண்ட சொத்தை கார்த்திகேயன் அவருடைய மனைவிக்கு 22.2.18 தேதியில் செட்டில்மெண்ட் பத்திரம் ஒன்றை எழுதி வைத்திருக்னிறார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் அதை நான் மறைத்து சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் தவறு. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தாவா சொத்துக்களை அடமானமாக காட்டி கடன் வாங்கி பிறகு அவற்றை ரத்து செய்திருக்கின்றோம் என்று கேட்டால் அவ்வாறு எதுவும் செய்தது கிடையாது. நான் சொல்வது போல 1வது பிரதிவாதிக்கு மட்டுமே இது தனிப்பட்ட பாத்திய சொத்ததாக இருந்திருந்தால் மற்றவர்களும் சேர்ந்தும் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை என்றும் திருப்பதி செட்டியாரின் பூர்விக சொத்து என்ற காரணத்தால் தான் அனைவரும் சேர்ந்து எழுதிக்கொடுத்திருக்கின்றோம் என்றால் தவறு, வாதியை மோசம் செய்வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் நாங்கள் ஆவணங்களை தாக்கல் செய்திருக்கின்றோம் என்றால் தவறு. வாதியின் கணவர் நான் சொல்வது போல தொழில் தொடங்குவதற்காக 20 லட்சம் ரூபாய் எங்களிடம் கேட்கவும் இல்லை என்றும் அதை கொடுக்க மறுத்ததன் காரணமாக 1வது பிரதிவாதியை வாதி செருப்பைக்கொண்டு எறியவும் இல்லை என்றும் சொன்னால் தவறு. 1வது பிரதிவாதி நீதிமன்றத்திற்கு வந்திருக்கின்றார். அவர் சாட்சியம் அளிக்காமல் நான் சாட்சியம் அளிப்பதற்கு சிறப்பான காரணம் எதுவும் உண்டா என்று கேட்டால் அவருக்கு உடல்நிலை முடியவில்லை.

தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றும் என்னுடைய சாட்சியம் ஏற்கத்ததக்கது அல்ல என்றால் தவறு. வாதி கோரியுள்ள தாவா சொத்தில் அவருக்கு பாகம் கிடைக்கதக்கது என்று சொன்னால் தவறு.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது
வழக்குநர் முன்னிலையில் சாட்சியின்
வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில்
வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக்
காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொங்ளளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.